// மின்னஞ்சலில்//

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி)செயல்முறைகள், சென்னை-600 006

ந.க.எண்.069920/அ5/இ4/2022, நாள்.10.11.2022

பொருள் : பள்ளிக்கல்வி – தமிழ்நாடு அமைச்சுப்பணி – அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியரல்லாதப் பணியிடங்கள் தோற்றுவித்து ஆணைபெறப்பட்டது – நிருவாகச் சீர்திருத்தத்தின்படி அலுவலகம் மற்றும் பள்ளிகளில் பணிமாறுதல், பதவிஉயர்வு, பணிநிரவல் முடித்து ஆய்வக உதவியாளர், பதிவறை எழுத்தர், ஓட்டுநர், அலுவலக உதவியாளர், இரவுக் காவலர், துப்புரவாளர், பெருக்குபவர் மற்றும் தண்ணீர் ஊற்றுபவரென பணியிட விவரங்கள் அனுப்பக் கோரியிருந்தமை – விரிவான அறிவுரை வழங்குதல் – அறிவுரையின்படி அறிக்கை அனுப்ப தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை :
1. அரசாணை (நிலை) எண்.125 பள்ளிக்கல்வித் (ப.க.4(1)) துறை, நாள்.16.12.2020
2. அரசாணை (நிலை) எண்.151 பள்ளிக்கல்வித் (ப.க.1(1)) துறை, நாள்.09.09.2022
3. தமிழ்நாடு பள்ளிக் கல்விஇணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறை ந.க.எண்.24689/அ4/இ1/2019, நாள். 12.08.2022, 14.10.2022 மற்றும் 20.10.2022 மற்றும் 31.10.2022

**********

பார்வை 3-இல் காணும் செயல்முறைகள்மீது அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

பார்வை 1-இல் காணும் அரசாணையின்படி மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஆசிரியரல்லாப் பணியிடங்கள் நிர்ணயிக்கப்பட்டு பார்வை (3) இல் காணும் 12.08.2022 நாளிட்ட செயல்முறைகளில் விரிவான அறிவுரைகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. மேலும் பார்வை (2)இல் காணும் அரசாணையின்படி அனைத்து அலுவலகங்களும் சீரான எண்ணிக்கையின் அடிப்படையில் பணியாளர்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களால் ஏற்கனவே பார்வை (1)இல்காணும் அரசாணையின்படி பள்ளிகள், மாவட்ட கல்வி அலுவலகங்களில் பணிபுரியும் ஆசிரியரல்லா (பதிவறை எழுத்தர்) பணியிடங்கள் நிர்ணயிக்கப்பட்டு பணிநிரவல் சார்ந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், அதுசார்ந்த அறிக்கை அனுப்பிடவும், பார்வையில் காணும் அரசாணையின்படி பணிநிரவல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வக உதவியாளர், பதிவறை எழுத்தர், ஓட்டுநர், அலுவலக உதவியாளர், இரவுக் காவலர், துப்புரவாளர், பெருக்குபவர் மற்றும் தண்ணீர் ஊற்றுபவர் ஆகிய பணியிடங்கள் சார்ந்து கோரப்பட்டுள்ள விவரங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவங்களில் முதன்மைக் கல்வி அலுவலர்கள் அனைத்து பள்ளிகள் மற்றும் இதர மாவட்டக் கல்வி அலுவலகங்களிலிருந்து பெற்று தங்கள் நிலையிலேயே தொகுப்பறிக்கையினை தயார் செய்து, பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) மின்னஞ்சல் முகவரிக்கு jdpcc2018@gmail.com அனுப்பிட அறிவுறுத்தலாகிறது. மேலும் இதுசார்ந்த கீழ்கண்ட விரிவான அறிவுரைகள் வழங்கலாகிறது.

/த.பி.பா/

**பொதுவான அறிவுரைகள்**

1. பணிமாறுதல் மற்றும் பணிநிரவல் செய்யப்பட்ட அடிப்படைப் பணியாளர்கள் (ஆய்வக உதவியாளர், பதிவறை எழுத்தர், ஓட்டுநர், அலுவலக உதவியாளர், இரவுக் காவலர், துப்புரவாளர், பெருக்குபவர் மற்றும் தண்ணீர் ஊற்றுபவர்) அனைவரும் ஏவரேனும் இதுநாள்வரை பழைய பணியிடத்தில் விடுவிப்பு பெறவில்லை என்றால்அவர்கள் உடன் விடுவிக்கப்பட்டு புதிய பணியிடத்தில் பணியேற்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. பதவி உயர்வு பெற்று உரிமைவிடல் செய்யாத அனைத்து பணியாளர்களும் பதவிஉயர்வு வழங்கப்பட்ட புதியபணியிடத்தில் பணியேற்றனரா என்பதை உறுதிசெய்ய வேண்டும்.

**அலுவலக பணியிடங்கள் சார்ந்தவிவரம் அளித்திட அறிவுரைகள் வழங்குதல்:**

1. பார்வை (2)இல்காணும் அரசாணையின்படி நிருவாக சீர்திருத்தம் காரணமாக மாவட்டங்களில் உள்ள அனைத்து அலுவலகங்களிலும் பார்வை 2ல் காணும் அரசாணையில் குறிப்பிட்டுள்ள எண்ணிக்கையில் பணியாளர்கள்நிர்ணயம் செய்யப்பட்டுள்ள இதன்விவரம் ஏற்கனவே கோரப்பட்டுள்ளது. அவ்வாறு நிர்ணயம் செய்தபின்பு கூடுதலாக இருந்தாலோ, தேவையாக இருந்தாலோ [Surplus & Need] அதன்விவரம் இவ்வாணையரகத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

| வ. எண் | அலுவலகத்தின் பெயர் | ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட பணியிட எண்ணிக்கை | அரசானை 151-ன்படி நிர்ணயிக்கப்பட்ட பணியிட எண்ணிக்கை | கூடுதல் தேவை (Need Post) பணியிட எண்ணிக் கை | உபரி (Excess post) பணியிட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |

மேற்காண் படிவத்தை ஆய்வக உதவியாளர், பதிவறை எழுத்தர், ஓட்டுநர், அலுவலக உதவியாளர், இரவுக் காவலர், துப்புரவாளர், பெருக்குபவர் மற்றும் தண்ணீர் ஊற்றுபவர் பதவி வாரியாக அனுப்பிடல் வேண்டும். பணியிட நிர்ணயத்திற்கு பின்பு தேவை (Need Post) பணியிடங்களுக்கு இவ்வாணையரகத்தால் உபரி (Excess post) பணியிடங்களுக்கு நிரவல் ஆணை வெளியிட ஏதுவாக இதுசார்ந்த விவரத்தினை ஏற்கனவே வழங்கப்பட்டபடிவம் 1இல் (மீளவும் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது) DDO code, HOD code, அரசாணைஎண்/ நாள், Post Code எனஅனைத்து கலங்களும் விடுபடாமல் பூர்த்திசெய்து அனுப்பிடவேண்டும்.

| S.NO | DISTRICT | EDN DIST | STATION DETAILSof NEED POST (for Office) | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | HOD CODE | DDO CODE | OFFICE NAME | POST NAME | FILLED / VACANT |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |

/த.பி.பா/

| S. NO | DISTRICT | EDN DIST | EXISITING STATION DETAILSof EXCESS POST (for Office) | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | HOD CODE | DDO CODE | OFFICE NAME | POST NAME | POST CODE | SANCTIONED G.O NUMBER WITH DATE | G.O PERMANENT /TEMPORARY |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

மேற்காண் படிவத்தை ஆய்வக உதவியாளர், பதிவறை எழுத்தர், ஓட்டுநர், அலுவலக உதவியாளர், இரவுக் காவலர், துப்புரவாளர், பெருக்குபவர் மற்றும் தண்ணீர் ஊற்றுபவர் பதவிவாரியாக தனித்தனியாக அனுப்பிடல் வேண்டும்.

**பள்ளியின் பணியிடங்கள் சார்ந்த விவரம் அளித்திட அறிவுரை வழங்குதல் :**

பார்வை 1இல் காணும் அரசாணையின்படி அரசுஉயர்நிலைமற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் முதன்மைக்கல்வி அலுவலரால் ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டு பணிநிரவல் சார்ந்த பள்ளிகள் 29.09.2022 அன்று நிறைவடைந்தது. இதுசார்ந்த விவரம் கோரப்பட்டதில் முழுமையாக விவரம்கிடைக்கப் பெறவில்லை. எனவே கீழ்கண்டவாறு மீளவும் கோரப்படுகிறது.

| வ. எண் | ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட பணியிட எண்ணிக்கை | அரசானை125-ன்படி நிர்ணயிக்கப்பட்ட பணியிட எண்ணிக்கை | கூடுதல் தேவை (Need Post) பணியிட எண்ணிக்கை | உபரி (Excess post) பணியிட எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | | | | |

மேற்காண் படிவத்தை ஆய்வக உதவியாளர், பதிவறை எழுத்தர், ஓட்டுநர், அலுவலக உதவியாளர், இரவுக் காவலர், துப்புரவாளர், பெருக்குபவர் மற்றும் தண்ணீர் ஊற்றுபவர் பதவிவாரியாகஅனுப்பிடல் வேண்டும்.

1. அரசாணை 125-ற்கு முன்பே பள்ளியில் பணியிடம் அனுமதிக்கப்பட்டு தற்போது அரசாணை 125-இன் படியும்பணியிடம் தொடரும் பள்ளிகளின் பெயர்பட்டியல் (பதிவறை எழுத்தர்)
2. அரசாணை 125-இன் படியான பணிநிரவலுக்கு முன்பணியிடம் இன்றிதற்போது அரசாணை 125-ன்படி அனுமதிக்கப்பட்ட பணியிடம். இப்பணியிடத்திற்கு அரசாணை தேவைப்படும் பள்ளிகளின் பெயர்பட்டியல் (NEED POST)

| S.NO | DISTRICT | EDN DIST | STATION DETAILSof NEED POST (FOR SCHOOL) | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | HOD CODE | DDO CODE | SCHOOL NAME | POST NAME | FILLED / VACANT |
| | | | | | | | |
| | | | | | | | |

மேற்காண் படிவத்தை ஆய்வக உதவியாளர், பதிவறை எழுத்தர், ஓட்டுநர், அலுவலக உதவியாளர், இரவுக் காவலர், துப்புரவாளர், பெருக்குபவர் மற்றும் தண்ணீர் ஊற்றுபவர் பதவி வாரியாக அனுப்பிடல் வேண்டும்.

/த.பி.பா/

3. அரசாணை 125-ன் படிபள்ளியில் உபரி பணியிடம் என கண்டறியப்பட்ட பணியிடத்தினை கீழ்க்குறிப்பிட்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து அனுப்பிட வேண்டும். மேலும், 29/09/2022 அன்று பணியாளருடன் உபரிஎன கண்டறியப்பட்டு அதன்பின் அப்பணியாளர் மாறுதலில் சென்றால் அப்பணியிடம், பணியாளரின்றி உபரிஎன்றே குறிப்பிடப்பட வேண்டும். நாளது தேதிவரை அந்த உபரி பணியிடத்தில் பணியாளர்மாறுதல் பெறாமல் அல்லது மாறுதல் அளிக்கபணியிடம் இல்லாமல் பணிபுரிந்து வந்தால் மட்டுமே பணியாளருடன் உபரி என கருத்தப்பட வேண்டும்.

| DETAILS OF SURPLUS POST WITH PERSON AS PER G.O 125 SE4(1) DEPT DT:16.12.2020 | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| S.NO | DISTRICT | EDN DIST | EXISITING STATION DETAILS OF EXCESS POST (FOR SCHOOL) | | | | | | | |
| | | | HOD CODE | DDO CODE | SCHOOL NAME | POST NAME | POST CODE | SANCTIONED G.O NUMBER WITH DATE | G.O PERMANEN /TEMPORA RY |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

| DETAILS OF SURPLUS POST WITHOUT PERSON AS PER G.O 125 SE4(1) DEPT DT:16.12.2020 | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| S.NO | DISTRICT | EDN DIST | EXISITING STATION DETAILSOF EXCESS POST (FOR SCHOOL) | | | | | | |
| | | | HOD CODE | DDO CODE | SCHOOL NAME | POST NAME | POST CODE | SANCTIONED G.O NUMBER WITH DATE | G.O PERMANENT/ TEMPORARY |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

மேற்காண் படிவத்தை ஆய்வக உதவியாளர், பதிவறை எழுத்தர், ஓட்டுநர், அலுவலக உதவியாளர், இரவுக் காவலர், துப்புரவாளர், பெருக்குபவர் மற்றும் தண்ணீர் ஊற்றுபவர் பதவி வாரியாக அனுப்பிடல் வேண்டும்.

மேலும், 01/11/2022 நிலவரப்படியான காலிபணியிட எண்ணிக்கை ஆய்வக உதவியாளர், பதிவறை எழுத்தர், ஓட்டுநர், அலுவலக உதவியாளர், இரவுக் காவலர், துப்புரவாளர், பெருக்குபவர் மற்றும் தண்ணீர் ஊற்றுபவர் பதவி வாரியாக அனுப்பிடல் வேண்டும்.

**<u>பொறுப்பாளர் நியமிக்க அறிவுறுத்தல்</u>**

மேற்காணும் பணியினை விரைந்து முடித்து அறிக்கை அனுப்பிட ஏதுவாக மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக நிருவாக (Establishment) பிரிவு கண்காணிப்பாளரை இப்பணிக்கான பொறுப்பாளராக நியமத்து அறிக்கையினை சுணக்கமின்றி 14.11.2022-க்குள் இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) பெயரிட்ட முகவரிக்கும் jdpcc2018@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தவறாமல் அனுப்பிட திட்டவட்டமாக தெரிவிக்கலாகிறது.

/த.பி.பா/

மேலும் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் விவரம்வரப் பெற்றால் மட்டுமே மாநில அளவில் அதனை தொகுத்து உபரி பணியிடங்களிலிருந்து தேவையுள்ள பணியிடத்திற்கு மாற்றம் செய்ய இயலும் என நினைவுப்படுத்தப்படுகிறது. இப்பொருள் சார்ந்துஅறிக்கை அனுப்புவதில் ஏதும் காலதாமதம் ஏற்படும் சூழலில் அதனால் பணியாளருக்கு ஊதியம் பெறுவதில் தாமதம் ஏற்படும் சூழல் நேர்ந்தால் அதற்கு சம்மந்தப்பட்ட மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரே முழுபொறுப்பாவர் என தெரிவிக்கலாகிறது.

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்.

நகல்-

1. இயக்குநர். மெட்ரிக் பள்ளிகள்,
2. இயக்குநர், பள்ளிச்சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி,
3. இயக்குநர், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
4. இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்ககம்,
5. இயக்குநர், அரசுத் தேர்வுகள் இயக்ககம்.

தங்கள் அலுவலக சார்ந்த பணியாளர்கள் விவரங்கள் அனுப்பும் பொருட்டு பணிந்தனுப்பப்படுகிறது.

E:\069920 A5, E4.docx system no 9